அசல் வழக்கு எண்.184/2024 நாள்: 21.04.2026

வா.சா.1 திரு. முத்துராசு

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

2) வழக்கு சொத்து எனது தகப்பனார் முருகையன் பெயரில் குத்தகை சாகுபடி இருந்து வந்தது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நாங்கள் எத்தனை பேர் வாரிசு என்றால் 1.மதியழகன், 2. தேவேந்திரன், 3. முத்துராசு, 4.மலர்க்கொடி, 5.சித்ரா ஆகியோர் ஆவர். எனது தகப்பனார் இறந்த பிறகு குத்தகை நிலத்தை வாரிசுகளுக்குள் பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால் இல்லை, ஆண் வாரிசுகள் மூவரும் சேர்ந்து அனுபோகம் செய்து வருகிறோம். எனது வழக்கில் மேற்படி கூட்டு அனுபோகம் பற்றி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது அனுபோகத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று குறிப்பிட்டு பரிகாரம் கேட்டுள்ளேனே தவிர எங்களது அனுபோகத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

3) குத்தகை உரிமை பதிவேட்டில் எனது தகப்பனாரின் வாரிசுகள் 5 பேரும் மனு செய்யவில்லை நான் மட்டும் மனு செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் உப்புகாய்ச்சிபேட்டை இல்லை என்றால் சரியல்ல, எனது அப்பா பிறந்த ஊர் சிலுப்பனூர், நான் பிறந்த ஊர் உப்புக்காய்ச்சிப்பேட்டை. நான் சிலுப்பனூர் கிராமத்தில் பிறந்ததை மறைத்து உப்புக்காய்ச்சிப்பேட்டையில் பிறந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்மீது குற்றவழக்கு திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் நான் கொடுத்த புகார் சிவில் சம்மந்தப்பட்டது என்று கூறி நடவடிக்கை எடுக்காமல் 1 ஆம் பிரதிவாதி கொடுத்த புகாரின்பேரில் என்மீது வழக்கு பதிவு செய்துவிட்டார்கள்.

4) தாவா சொத்தின் ஒருபகுதியை 1ம் பிரதிவாதி அனுபோகம் செய்து வருவதை நான் இடையூறு செய்ததால் 1-ம் பிரதிவாதி கொடுத்த புகாரின்பேரில் என்மீது குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வேண்டுமென்று பொய் புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி பிரச்சனை ஏற்பட்டதால் பஞ்சநதிஸ்வரர் கோவில் நிர்வாகம் சார்பில் வழக்கு சொத்தை அளந்து அதில் எனக்கு 16 மா மற்றும் 180 குழி ஒதுக்கினார்கள் என்றால் சரியல்ல. நம்மை 1ம் பிரதிவாதி குடும்பத்தினர் வாழவைத்தார்கள் என்றும், அவர்களிடம் ஏன் பிரச்சனை செய்கிறாய் என்றும், எனது தம்பி மதியழகன் பிரச்சனை செய்து 16 மா மற்றும்

180 குழிநிலத்தை என்னிடமிருந்து பறித்து எனது தம்பி மதியழகன் பயிர் செய்து வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை.

5) தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை ஆக்கினாதபுரம் முத்து, கிடுக்கன் ஆகியோரிடம் உள்குத்தகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு உள்குத்தகைக்கு விட்டுள்ளேனா என்பதை எனது தம்பி மதியழகன், முத்து, கிடுக்கன் ஆகியோரை விசாரித்தாள் உண்மை தெரியும் என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள குத்தகை உரிமை பதிவேடு மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அதில் 1–ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் வருவாய் நீதிமன்றத்தில் 1–ம் பிரதிவாதி மேல்முறையீடு செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 1–ம் பிரதிவாதி எனக்கு உறவுமுறை என்றால் அக்கா உறவு ஆகும்.

6) எங்களது ஊரை சேர்ந்த வெங்கடாசலம் என்பவர் 1998–ல் பாகபிரிவினை செய்து கொடுத்தார் என்றால் இல்லை, கோவில் சொத்து எனது தகப்பனார் பெயரில் இருப்பதை எனது தகப்பனாரை வைத்துக்கொள்ளுமாறு சொன்னார். தாவா சொத்தில் 3வது இன சொத்தானது 1–ம் பிரதிவாதியின் கணவர் பவுன்ராஜ்–க்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பவுன்ராஜுக்கு ஒதுக்கிய சொத்தை பவுன்ராஜ் காலத்திற்கு பிறகு 1–ம் பிரதிவாதி அனுபோகம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் எனது தகப்பனார் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.146/1998–ல் 1–ம் பிரதிவாதியோ, அவரது கணவரோ தரப்பினர் அல்ல என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.146/1998–ன் தீர்ப்பு 1–ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான்.

7) தாவா சொத்துக்களை நான் சாகுபடி செய்கிறேன் என்பதை காட்டுவதற்கு சிட்டா, அடங்கல் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மோசடியாக பதிவு செய்யப்பட்ட குத்தகை உரிமை பதிவின் அடிப்படையில் 2024ல் மட்டும் அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அடங்கல் கணக்கானது வழக்கு தாக்கல் செய்வதற்காக பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7–ல் நான் சாகுபடி செய்வதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி தாவா சொத்தை சாகுபடி செய்வதால்தான் எனது பெயர் அடங்கல் கணக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5–ல் யார் சாகுபடி செய்கிறார் என்று கிராம நிர்வாக அலுவலரை விசாரித்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

8) நான் கோவில்நிர்வாகத்தை சரிகட்டி உண்மையான சாகுபடியாளரான 1–ம் பிரதிவாதிக்கு தெரியாமல் குத்தகை உரிமை பதிவேட்டில் எனது பெயரை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி குத்தகை உரிமை பதிவேட்டின் மீது செய்துள்ள மேல்முறையீட்டில் கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/Muthurasu

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.21 17:06:43 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU